<u>பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் செயல்முறை ஆணைகள்</u>

<u>பிறப்பிப்பவர் : திரு.தி.ந.வெங்கடேஷ், இ.ஆ.ப.,</u>

<u>செ.மு.எண்:அ5/ 2246/2024</u> <u>நாள்.03.04.2024</u>

பொருள்: பொதுப்பணி – பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம், சென்னை–5 கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி. வெ.சௌந்தர்யா என்பவருக்கு பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள். 23.01.2020.
2. அரசாணை எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள்.02.03.2016.
3. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் செயல்முறை ஆணை எண்.அ5/7248/2021, நாள். 12.03.2022.
4. சேலம் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரின் ந.க.எண்.5948/2023/பிசி7. நாள்.24.08.2023
5. அரசாணை எண்.33, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள்.08.03.2023

<u>ஆணை</u>

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை வட்டம், மல்லனம்பட்டி அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியில் இருந்த போது 13.07.2012 அன்று இறந்த திரு.வெங்கட்ராஜன் என்பவரது மகள் திருமதி. வெ.சௌந்தர்யா என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணியிடம் வழங்கக் கோரி 27.08.2012 அன்று விண்ணப்பம் பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து முதுநிலையின் அடிப்படையில் தனியருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியிடம் பார்வை 3–ல் படிக்கப்பட்ட செயல்முறையின் அடிப்படையில் வழங்கப்பட்டதின்பேரில், தனியர் இளநிலை உதவியாளராக சேலம் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் அலுவலகத்தில் 16.03.2022 பி.ப முதல் பணிபுரிந்து வருகிறார். பார்வை 3–ல் படிக்கப்பட்ட செயல்முறையின் மூலம் உத்தரவிடப்பட்டது.

2) திருமதி. வெ.சௌந்தர்யா என்பவரின் பிறந்த நாள்.23.12.1993, தனியர் பணியில் சேர்ந்த நாள்.16.03.2022 அன்று தனியரின் வயது 29 வருடம், 03 மாதங்கள் மற்றும் தனியர் பன்னிரெண்டாம் வகுப்பு படிப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். எனவே, தனியர் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி பொதுவிதிகளின்படி இளநிலை உதவியாளருக்குரிய வயது மற்றும் கல்வித்தகுதிகளைப் பெற்றிருப்பதால் வயது மற்றும் கல்வித்தகுதிகளில் எவ்வித விதித்தளர்வுகளும் தேவையில்லை. மேலும், தனியரின் கல்வி

சான்றிதழ்கள் அரசுத் தேர்வுத் துறை இயக்குநரகத்திற்கு அனுப்பப்பட்டு, மெய்தன்மை உடையவை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

3) எனவே, பார்வை 5-ல் படிக்கப்பட்ட அரசாணையின் (G.O. (Ms.) No.33 நாள்: 08.03.2023 Labour Welfare and Skill Development (Q1) Department) பிற்சேர்க்கை அறிவிப்பு எண் 16 மற்றும் தமிழ்நாடு அமைச்சுப்பணிவிதிகளில் விதி எண் 10 பிற்சேர்க்கை (II) இன் படி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி. வெ.சௌந்தர்யா என்பவருக்கு அவர் பணியில் சேர்ந்த நாளான 16/03/2022 பிற்பகல் முதல் தனியரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

4) மேலும், பணிவரன்முறை செய்யப்படும் நாளிலிருந்து, நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்குட்பட்டு தனியர் முதல் ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத்தொகைகள் ஏதேனும் இருப்பின் அவற்றைப் பெறத் தகுதியுடையவராகிறார் என்று ஆணையிடப்படுகிறது.

5) தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் விதி எண்.32-இன்படி, இவர் மூன்றாண்டு தொடர்பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவ காலத்தில் வைக்கப்படுகிறார்.

6) மேலும் தனியருக்கு இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான பதிவுகளை தனியரது பணிப் பதிவேட்டில் மேற்கொள்ளுமாறு சேலம் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் தகுதிகாண் பருவம் விளம்புகை செய்து உத்தரவிடப்பட்ட பின்னர் இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவர் ஆவார் என்றும் உத்தரவிடப்படுகிறது.

ஒம்/-xxxxx
பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர்

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையருக்காக

பெறுநர்
திருமதி.வெ.சௌந்தர்யா,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலகம்
சேலம் மாவட்டம் .........உரிய வழிமுறையாக

**நகல் சமர்ப்பிக்கப்படுகிறது**
அரசுச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.

**நகல்**

1. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை – 3.
2. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் சேலம் மாவட்டம்
3. இணை இயக்குநர், கள்ளர் சீரமைப்பு , மதுரை – 20
4. சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை.
5. தனியரின் பணிப்பதிவேடு.
6. அ5 இருப்புக் கோப்பு